Registered No. M-4345.

யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ௵ ஜூலை ௴ 18உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 18

வாரச் செய்திக் குறிப்புகள்.

1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப்போர்.

சென்ற திங்கட்கிழமை, லண்டன் நகர சபையார் பிரிட்டிஷ் மந்திரிகளுக்குக் கொடுத்த பகல் விருந்தில் பேசியபோது, முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் விமானப் போரைப்பற்றிச் சில விஷயங்கள் கூறினார். அவர் கூறியதாவது:—

"சென்ற செப்டெம்பர் மாதம் ஹிட்லர் செய்த முயற்சிகளை, பிரிட்டிஷ் விமான படை நாசமாக்கி விட்டது. பிரிட்டனிலுள்ள நகரங்களைத் தரைமட்டமாக்கிவிடுவேன் என்று ஹிட்லரால் சபதங் கூறப்பட்டது. செப்டெம்பர் மாத ஆரம்ப நாட்களில், ஜெர்மானியர்கள் தங்களுடைய முழுக் கோபத்தையும் லண்டன்மாநகரின் மேல் காட்டினார்கள். அதன் முடிவைப்பற்றி அப்போது பலவாரங்களாக நான் கவலை கொண்டிருந்தேன். ஒரு நாள் மாலை, மழை பெய்து இருட்டாயிருந்தது. நீண்ட வரிசைகளாக நூற்றுக்கணக்கான பேர் மோடார் 'பஸ்' வண்டிகளுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் அநேக இளம் பெண்கள் பட்டு மேஜோடுகளும், உயர்ந்த பின்கால் அமைப்புள்ள பாதரட்சைகளும் அணிந்திருந்தார்கள். அப்போது விமான அபாய எச்சரிக்கை சங்கு ஊதப்பட்டது. உடனே அவர்கள் ஓடி ஒளிந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்ட என் இருதயம் லண்டனுக்காகவும், லண்டனிலுள்ள மக்களுக்காகவும் துடி துடித்தது.

"இம்மாதிரி நான்கு மாதங்களாக இடைவிடாமல் லண்டன் தாக்கப்பட்டது. ஒவ்வொரு சமயத்தில் பல பிரதேசங்களில் ஏராளமான மக்கள் சமையல் செய்வதற்கு உபயோகிக்கும் "காஸ்" என்ற நிலக்கரி வாயு "சப்ளை" செய்யும் சாதனங்கள் வெடி குண்டுத் தாக்குதல்களினால் உடைக்கப்பட்டன; சில சமயங்கள் மின்சார சக்தி சாதனங்கள் நாசமாக்கப்பட்டன; தண்ணீர் 'சப்ளை' நின்று விட்டது; ரயில்வேக்கள் தகர்க்கப்பட்டன; சில ஹில்லாக்கள் நெருப்புக்கு இரையாய்விட்டன; 20,000 மக்கள் உயிர் துறந்தார்கள். ஆனால் ஒன்று மாத்திரம் மாறவேயில்லை. லண்டன்மா நகர மக்கள் முதலிலிருந்து தைரியமும், அஞ்சா நெஞ்சமும், மனோ வலிமையும் காட்டி வந்தார்கள். அஞ்சாமை என்ற மலையினமேல் அசையாமல் அவர்கள் நின்றார்கள். எல்லா பொது ஊழியச் சேவைகளும் கிரமம்போல் நடந்துவந்தன. கோடிக்கணக்கான மக்கள் நாடோறும் நடத்தும் வாழ்க்கைக்குக் கெடுதி நேராமல், பழுதாக்கப்பட்ட சாதனங்கள் திருத்தப்பட்டு செம்மையாக்கப்பட்டன. கடுமையான வெடிகுண்டுத் தாக்குதல்களுக் கிடையே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

"லண்டனில் மாத்திரமல்ல, இதர நகரங்களிலும், துறைமுகப் பட்டணங்களிலும், எதிரிகளின் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்கள், தளராத மன உறுதியும், தைரியமும் காண்பித்தார்கள். இம்மாதிரியான வெடிகுண்டுத் தாக்குதல்கள் மீண்டும் தொடர்ந்து நடத்தப்படும் என்று எதிர்பார்க்கிறது, வரப்போகும் இலையுதிர்காலத்துக்கும் மழைக்காலத்துக்கும், முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வெடி குண்டு வீழும் பாது ஒதுங்குவதற்காக, தரை மட்டத்துக்கு கீழ் கட்டப்பட்டிருக்கும் தங்குமிடங்கள் சகல சௌகரியங்களுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. வெடி குண்டுகளால் உண்டாகும் நெருப்புக்களைக் கவனிப்பதற்கும், அணைப்பதற்கும் ஏற்பாடுகள் சிறந்த முறையில் செய்யப்படுகின்றன.

"மறுபடியும் வெடிகுண்டு புயல் காற்று அடிக்குமானால், அதற்கு லண்டன் தயாராயிருக்கிறது. லண்டன் அதற்குப் பயப்படப்போவதில்லை; தாக்குதல்களை, முன்பு தாங்கியதைப்போல், இப்போதும் தாங்கும். எதிரியின் தயவையும், இரக்கத்தையும் நாங்கள் கேட்கவில்லை. எங்களுக்கு ஜெர்மானியர்கள் என்னென்ன செய்தார்களோ அவைகளுக்கெல்லாம் அதிகமாக ஜெர்மானியர்களிடம் பழிக்குப் பழி வாங்குவோம். வார்சா, பெல்கிரேட், முதலிய நகரங்களில் எதிர்த்துப் போராடாத மக்களின் மேலும், இப்போது ருஷ்ய மக்களின்மேலும், வெடிகுண்டுகளைக் கடுமையாகப் போடும் ஜெர்மானியர்களுடன் லண்டன் நகரமக்கள் எந்நாளும் சமாதானப் பேச்சு வைத்துக்கொள்ளமாட்டார்கள்.

"ஜெர்மானியர்கள் எவ்வளவு கெடுதிசெய்தாலும் செய்யட்டும். எங்களுடைய காலம் சீக்கிரம் வரும். இப்போதே வந்துவிட்டதென்று கூறலாம். எங்களுக்கும் உலகத்துக்கும் இரண்டு மகாயுத்தங்களில் செய்த தீமைக்கு, ஜெர்மானியர்கள் தங்களுடைய சொந்த நாட்டில் கஷ்டப்படவேண்டிய காலம் வந்துவிட்டது. ஜெர்மன் நகரங்கள், துறைமுகப் பட்டணங்கள், தொழிற்சாலைப் பிரதேசங்கள், ராணுவ லட்சியங்கள் முதலியவைகளை, சென்ற ஒரு மாதமாக, மிகக் கடுமையாகத் தாக்கிக்கொண்டு வருகிறோம். பிரதி மாதமும், பிரதி வருஷமும், இந்தத் தாக்குதலை அதிகப்படுத்திக்கொண்டு செல்லப் போகிறோம். ஒன்று, நாஸிகளுடைய ஆட்சி அடியோடு ஒழிந்து போகும் வரையிலாவது, அல்லது நற்புத்தி வந்து ஜெர்மானியர்களே அதை ஒழிக்கும் வரையிலாவது, நாங்கள் மிகக் கடுமையாகத் தாக்கிக்கொண்டேயிருப்போம்.

"யுத்தம் ஆரம்பித்த காலம் முதல்கொண்டு இது வரையில் பிரிட்டனில் போட்ட வெடி குண்டுகளில் பாதி 'டன்' வெடி குண்டுகள் சென்ற சில வாரங்களில் ஜெர்மனியில் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் இது ஆரம்பம்தான். அடுத்த ஜூலை மாதம் வருவதற்குள் இன்னும் அதிகப்படியாக ஏராளமான வெடிகுண்டுகள் ஜெர்மனியிலும், இத்தாலியிலும் போடப்படும். இதற்குப் பதிலாக ஜெர்மானியர்கள் கடுமையாகத் தாக்குவார்கள். அதற்கெல்லாம், நீங்கள் தயாராயிருக்க வேண்டும்."

பிரிட்டிஷ் முதல் மந்திரி கூறியபடி சென்ற வாரமும் ஜெர்மனியின் முக்கியமான பிரதேசங்களை பிரிட்டிஷ் விமானப்படை கடுமையாகத் தாக்கியிருக்கிறது. வட மேற்கு ஜெர்மனியின் கரையோரப் பிரதேசங்கள், வில்ஹெல்ம்ஷேவன், பிரெமென், ரூர் பிரதேசம், ரைன்லாந்து, ஆசன், பிரெஞ்சுக்கரையோர துறைமுகங்கள், வடக்கு பிரான்சு, பிரெஸ்ட் துறைமுகம், ஹாலந்து, பெல்ஜியம் இவைகளின் கரையோரப் பிரதேசங்கள், வட கடல் பிரதேசம்—இவைகளின் மேலெல்லாம் வெடிகுண்டுகள் ஏராளமாகப்போடப்பட்டன.

ஜெர்மன் ஆதிக்கத்திலிருக்கும் பிரெஞ்சு துறைமுகங்களை பிரிட்டிஷ் விமானங்கள் இடைவிடாமல் ஐந்து மணி நேரம் தாக்கின. தாக்கின அதிர்ச்சி, இங்கிலீஷ் கால்வாயைத்தாண்டி பிரிட்டிஷ் கரையோரப்பட்டணங்களிலுள்ள மக்களை எழுப்பிவிட்டது. தங்கள் பட்டணம்தான் தாக்கப்பட்டது என்று நினைத்து, தங்களுடைய படுக்கையிலிருந்து விரைந்தெழுந்து, விமானப்போர் பாதுகாப்பு இடங்களுக்குப் போனார்களாம்.

பிரிட்டனில், இங்கிலாந்தின் கிழக்குப் பிரதேசத்திலும், வட கிழக்குப் பிரதேசத்திலும், தென் கிழக்கு ஸ்காட்லாந்திலும், கிழக்கு ஆங்கிலியாவிலும், ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

தொடர்ச்சியாக நாலாவது வாரமாகிய சென்ற வாரத்தில், நஷ்டமடைந்த ஜெர்மன் விமானங்கள்

நூற்றுக்கு மேற்பட்டிருக்கின்றன. கிழக்கு ஐரோப்பா விர மற்ற எல்லா யுத்த அரங்கங்களிலும், சென்ற வாரத்தில் சுட்டு வீழ்த்தப்பட்ட ஜெர்மன் விமானங்கள் மொத்தம் 135. இதில், பிரிட்டனில் 22 ம், ஜெர்மனியிலும் ஜெர்மன் ஆதிக்கத்திலுள்ள நாடுகளிலும் 82 ம், மத்திய கிழக்கரங்கத்தில் அச்சு நாடுகளுடையதும். விஷியுடையதும் 30 விமானங்களும், கடலில் பிரிட்டிஷ் கடற்படையால் வீழ்த்தப்பட்டது ஒன்றும் ஆக 1.5 ஆகிறது.

சென்ற வாரம் நஷ்டமான பிரிட்டிஷ் விமானங்கள் 96. ஜெர்மனியிலும், ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகளிலும் வீழ்த்தப்பட்ட பிரிட்டிஷ் விமானங்கள் 85; மத்திய கிழக்கரங்கத்திலிருந்து, 11 பிரிட்டிஷ் விமானங்கள் திரும்பிவரவேயில்லை. பிரிட்டனைப் பாதுகாக்கும் வேலையில் ஒரு விமானங்கூட நஷ்டமாக வில்லை.

ஜெர்மன் வெடிகுண்டுகளால், பிரிட்டனில் உயிர் துறந்த மக்களும், காயம்பட்டவர்களும் மொத்தக் கணக்கு சென்ற மாதம் குறைந்திருக்கிறது. ஜூன் மாதத்தில் ராணுவ சம்பந்தமில்லாத சாதாரண மக்கள் 399 பேர் இறந்துபோய்விட்டார்கள். இதில் 175 பேர் ஆண்கள், 160 பெண்கள், 64 குழந்தைகள். காயம்பட்டவர்கள் 461. இதில் 239 பேர் ஆண்கள், 175 பெண்கள், 47 குழந்தைகள். இதல்லாமல் காணுமற்போன ஏழு ஆண்கள் இறந்துவிட்டதாகக் கருதப்பட்டார்கள்.

ஜூன் மாதத்தில் இறந்தவர்கள் 399 பேரென்றால் மே மாதத்தில் 5,300 பேரும், அதற்குமுன், ஏப்ரல் மாதத்தில் 6 065 பேரும் இறந்துபோய்விட்டார்கள். இந்த வருஷத்தின் முதல் ஆறு மாதங்களில், ஜெர்மன் வெடிகுண்டுத் தாக்குதலினால் இறந்தவர்கள் 18,314. அதற்கு முன் ஆறு மாதத்தில் இறந்தவர்கள் மொத்தம் 23,960.

2. ஆப்பிரிக்காவும் மத்தியதரைக் கடலும்.

சுயேச்சை பிரஞ்சு தளகர்த்தராகிய ஜெனரல் டிகால் மத்ய ஆப்ரிக்காவிலுள்ள பிரஞ்சு காங்கோ பிரதேச பட்டணமாகிய பிரேஸாவில்லுக்குப் போயிருக்கின்றார். அங்கிருந்து பிரான்சுக்கு ரேடியோ மூலம் பேசினார் என்று தெரிகிறது.

சிரிநெய்காவில் மார்டுபா, கஸலா என்ற இடங்களிலுள்ள விரோதி விமானங்களைப் பிரிட்டிஷ் விமானப்படை தாக்கிற்று. பெங்காசி துறைமுகம் பலமாகத் தாக்கப்பட்டது. டெர்னு, மார்டுபா, எல்ட் மீமி, கஸாலா விமான தளங்களும் தாக்கப்பட்டன.

மால்டாவின் மீது நடந்த ஆகாயச் சண்டையில் மூன்று இத்தாலிய விமானங்கள் சுட்டு கடலில் வீழ்த்தப்பட்டன. ஒன்பது விமானங்கள் சேதமடைந்தன. பிரிட்டிஷ் விமானங்களொன்றும் இழக்கப்படவில்லை.

மால்டாவின்மீது குண்டுகள் போடப்பட்டன. இதனால் சிறிது சேதம் உண்டாயிற்று. பலர் காயமடைந்தனரென்றும் இறந்தனர் என்றும் ஒரு அறிக்கை கூறுகிறது. காலை நேரத்தில் மால்டாவை நோக்கி வந்துகொண்டிருந்த விரோதி விமானக் கூட்டத்தை பிரிட்டிஷ் விமானங்கள் விரட்டியடித்துவிட்டன.

சைப்ரஸ் தீவிலுள்ள கப்பல் மீது இரண்டு விரோதி விமானங்கள் குண்டுகளை போட்டன. குறி தவறிவிட்டதனால் சேதமொன்றுமில்லை. சைப்ரஸ் தீவின் கிழக்கு துறைமுகமாகிய பாமாகஸ்டாவின் மீது குண்டுகள் போடப்பட்டன. பழைய பட்டணத்தில் சிறிது சேதம் உண்டாயிற்று. உயிர்ச்சேதமொன்றுமில்லை என்று அதிகார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் கடற்படையுடன் சேர்ந்து வேலைசெய்த நெதர்லாண்டு சப்மரீன், மத்யதரைக்கடலில் 8 000 டன் எடையுள்ள விரோதி டாங்கர் வெடிகுண்டு கப்பலை மூழ்கடித்தது.

காலை நேரத்தில் சூயஸ்கால்வாய், விரோதி விமானங்களால் தாக்கப்பட்டதென்றும், ஆறு பேர் இறந்தனரென்றும், 14 பேர் காயப்பட்டனரென்றும் பொருட்சேதமொன்றுமில்லை என்றும் ஈஜிப்ட் உள்நாட்டு மந்திரி அறிக்கை கூறுகின்றது.

ஜிப்ரால்டர்மீது குண்டுகளைப் போடவந்த இரண்டு இத்தாலிய விமானங்கள், குண்டுகள் போடுவதற்கு முன்பாகவே ஜிப்ரால்டர் விமான எதிர்ப்பு பாதுகாப்புப் படையால் விரட்டியடிக்கப்பட்டன.

மத்ய கிழக்கு அரங்கத்திலிருக்கும் துருப்புகளுடன், கிழக்கு ஆப்பிரிக்காவில் ஸ்கின்னர்ஸ் ஹார்ஸ், சென்ட்ரல் இண்டியன் ஹார்ஸ் படைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று யுத்த காரியாலய அறிக்கை கூறுகின்றது.

3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

கானடாவிற்கு அருகில், அட்லாண்டிக் கடலிலுள்ள நியூ பவுண்லாண்ட் தீவிற்கும், அதன் துறைமுகப் பட்டணங்களுக்கும், விசேஷ யுத்த பாதுகாப்புகள் அளிப்பதாக, கானடாவின் பிரதம மந்திரியாகிய மிஸ்டர் மெகன்ஸி கிங் வாக்குறுதி செய்திருக்கிறார்.

இரண்டு வருடத்திற்குப் பிறகு, சென்றவாரத்தில் ரஷ்ய ஸ்தானீகராகிய உமான்ஸ்கி, அமெரிக்க தலைவராகிய ரூஸ்வெல்டை வாஷிங்டனில் சந்தித்தார். ரஷ்ய-ஜெர்மன் சண்டையைப்பற்றிய முழுவிவரத்தையும் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டிற்குக் கூறினார். ரஷ்ய-ஜெர்மன் சண்டையும், ரஷ்யாவிற்கு அமெரிக்காவின் உதவி, முதலிய விஷயங்களைப்பற்றி ஆலோசித்தாக பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். ரஷ்ய-ஜெர்மன் யுத்தம் நீண்டகாலம் நடக்குமா என்று கேட்டதற்கு அவர் அது ஒரு கடுமையான யுத்தமாயிருக்குமென்று பதிலளித்தார்.

வாஷிங்டனில் பிரிட்டிஷ் ஸ்தானீகராயிருந்த ஹாலிபாக்ஸ் பிரபு பிரதம மந்திரியைக் கலந்து ஆலோசிக்க இங்கிலாந்திற்குப் போயிருக்கிறார். அவர் அடுத்த மாதத்தில் மறுபடியும் லண்டனுக்குப்போய் இரண்டு மூன்று வாரங்கள் தங்கியிருக்கப்போவதாக தெரிவித்தார். அவருடைய பிரிட்டிஷ் ஸ்தானீகர்வேலை காலியாகும் என்ற வதந்தி ஊர்ஜிதமாகவில்லை. சென்ற செவ்வாய்க்கிழமையன்று தன் மனைவியுடன் ஹாலிபாக்ஸ் பிரபு வட அமெரிக்காவிலுள்ள காலிபோர்னியாவிற்குச்சென்றார். அங்கு ஆகாய விமான உற்பத்திச்சாலைகளைத் தணிக்கைசெய்தபிறகு ஜூலை 23உ வாஷிங்டனுக்குத் திரும்புவார் என்று தெரிகிறது.

அமெரிக்க தேசீயப் பாதுகாப்பிற்காக, இன்னும் 477 கோடி டாலர்கள் ஒதுக்கப்படவேண்டுமென்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறினார்.

பிரிட்டனுக்கு உதவிசெய்வதாக வெறும் வார்த்தைகளில் சொல்லிக்கொண்டிருப்பது பிரயோசனமில்லையென்றும், வட அயர்லாந்திலும், ஸ்காட்லண்டிலும் அமெரிக்க ராணுவ தளங்கள் உடனே ஏற்படுத்தவேண்டுமென்றும் வெண்டல் வில்கி கூறினார். ஐஸ்லாந்திற்கு அமெரிக்க துருப்புகள் அனுப்பியது சரியல்லவென்றும் வாஷிங்டன் செனட் மெம்பராகிய மிஸ்டர் டாப்ட் கூறினார். இந்தச்செய்கை அமெரிக்கா யுத்தத்தில் தீவிரமாக ஈடுபடுவதைக் காட்டுகின்றது என்று அவர் கருதுகிறார். அமெரிக்க செனட் கடற்படை கமிட்டி, கர்னல் நாக்ஸையும், கடற்படைத் தலைவரான அட்மிரல் ஷார்க்கையும், அழைத்திருக்கிறது. ஜெர்மன் கப்பல்களுடன் அமெரிக்க கடற்படை கைகலந்துவிட்டதா என்பதைத் தெரிந்துகொள்வதற்காக என்றுதெரிகிறது.

அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடத்தான் வேண்டுமென்று நியூயார்க் போஸ்ட் பத்திரிகை கூறுகிறது. அது கூறுவதாவது; "அமெரிக்கா இப்போது சண்டையில்தான் இருக்கின்றது..............நம்முடைய தேசத்தின் எதிர்கால வாழ்க்கை இந்த யுத்தத்தின் முடிவைப் பெரிதும் பொறுத்ததாயிருக்கின்றது. இப்போது சண்டையா, சமாதானமா, என்ற பிரச்சினையில்லை. நாம் இந்த யுத்தத்தில் ஈடுபடாமலிருக்க முடியாது. இந்த யுத்தம் நம்முடைய யுத்தம்; நம்முடைய சுயேச்சையையும், வாழ்க்கையையும் பாதிக்கும் யுத்தம். நாஜி ஆதிக்கம் நமக்கு சத்துரு. ஆகையினால் நாங்கள் வேண்டிய ஆயுதங்களைக் கொடுக்கின்றோம், நீங்கள் உங்கள் உயிர்களைத் தியாகம் செய்யுங்கள் என்று நாம் பிரிட்டிஷ்காரர்களைக் கேட்பது தவறல்ல."

அஸோர்ஸ், கேப் வெர்டி தீவுகளில் அமெரிக்க துருப்புகளின் உதவி அவசியமில்லை என்றும் தாங்களே வேறு யாரும் படையெடுக்காமல் பார்த்துக் கொள்வதாகவும் போர்ச்சுகீஸிய மந்திரி தெரிவித்த பிறகு அமெரிக்காவும் துருப்புகளை அந்த தீவுகளுக்கு அனுப்புவதில்லை என்று கூறியிருக்கின்றது.

அமெரிக்க துருப்புகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் விஷயமாக கலந்து ஆலோசிக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஒரு மகாநாட்டைக் கூட்டியிருக்கின்றார்.

உலகத்திலேயே மிகப் பெரிய வெடிமருந்துசாலை கானடாவில்தானிருக்கின்றதென்றும், அது மோட்டார் யுத்த வண்டிகள் ஒரு லக்ஷத்திற்குமேல் செய்து கொடுத்திருக்கின்றதென்றும், யந்திர துப்பாக்கிகளைப் பெருவாரியாகச் செய்திருக்கின்றதென்றும், கானடாவின் ஹை கமிஷனராகிய மிஸ்டர் மாஸி பிளிம (லண்டன்) நகரவாசிகளிடம் கூறினார்.

4. கிரீசும், இத்தாலியும்.

ஜூன்மாதம் முடிய யுத்தத்தில் இறந்த இத்தாலியர்களின் (இதர வகுப்பினர்களும் உள்பட) எண்ணிக்கை ஐந்து லக்ஷத்திற்கு மேலிருக்கும். இத்தாலிய, இதர வகுப்புக் கைதிகளும், இறந்தவர்களும் மொத்தம் ஐந்து லக்ஷத்து எண்பத்திரண்டாயிரம் என்று லண்டன் அதிகார வட்டாரங்களினால் தெரியவருகின்றது.

சென்ற ஜூன் மாதத்தில் 10,286 இத்தாலியர்கள் யுத்தத்தில் இறந்தனர் என்றும், சென்ற பதின்மூன்று மாதங்களில் யுத்தத்தில் இறந்த இத்தாலியர்களின் எண்ணிக்கை 235,360 என்றும், இத்தாலிய சர்க்கார் தெரிவிக்கின்றார்கள்.

பிரிட்டிஷ் விமானங்கள் பகலில் கீழாகப் பறந்து சிரக்யூஸ் (இத்தாலி) பட்டணத்தைத் தாக்கினவென்றும் சிரக்யூஸுக்கு அருகில் நீர் மிதக்கு யுத்த விமானங்களைத் தாக்கி, மூன்று விமானங்களைக் கொளுத்திவிட்டு மற்றவைகளுக்குப் பலத்த சேதமுண்டாக்கினவென்றும். நேபிள்ஸ் நகரம் இரவில் மூன்று மணிநேரம் தாக்கப்பட்டதென்றும் இத்தாலிய சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

ஜெர்மனி கிரீசின்மீது படையெடுக்கும்போது துருக்கி தேசத்தில் தஞ்சம் அடைந்த நான்கு கிரேக்க சாமான் கப்பல்களை அங்குள்ள ஒரு பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி வாங்கியதும் 'யூனியன் ஜாக்' கொடிகளைப் பறக்க விட்டன. அந்த கப்பல்களிலிருந்த மாலுமிகளும் தலைவர்களும் கிரீஸ் தேசம் பொம்மை சர்க்கார் (குஸ்லிங்ஸ்) ஆதிக்கத்திலிருப்பதால் அங்கே திரும்பிப் போக மறுத்துவிட்டனர். இந்த கிரேக்க கப்பல்களில் இரண்டு கப்பல்கள் ஒவ்வொன்றும் 5,000 டன் எடையுள்ளவை ; மற்ற இரண்டு கப்பல்கள் ஒவ்வொன்றும் 4,000 டன் எடையுள்ளவை.

5. பால்கன்ஸ், சிரியா முதலியன.

சிரியாவில், விஷியின் ஹைகமிஷனர் ஜெனரல் டெண்ட்ஸ் கோரியபடி. சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையின் விவரங்கள் வேறொரு பக்கத்தில் ஒரு கட்டுரையில் காணலாம்.

6. கப்பல் நிலைமை.

1943-ம் வருஷத்திற்குள் அமெரிக்கா வருஷத்திற்கு நூறு நாசகாரிக் கப்பல்கள் கட்டும் என்று அமெரிக்கக் கப்பல் கட்டும் தலைவராகிய அட்மிரல் ராபின்ஸன் தெரிவித்தார்.

ஜூலைமீ 7உ முடிந்த வாரத்தில் மொத்தம் லக்ஷத்து ஐயாயிரம் டன் எடையுள்ள 37 விரோதி கப்பல்களைப் பிரிட்டிஷ் படைகள் தாக்கினவென்றும் அவற்றுள் 40 ஆயிரம் டன் எடையுள்ள கப்பல்கள் முழுகடிக்கப்பட்டனவென்றும் தெரிகிறது. மத்திய தரைக்கடலில் இரண்டு இத்தாலிய யுத்த கப்பல்கள் தாக்கப்பட்டன. 'கோரிஸியா' என்ற கப்பலின் வெடிமருந்து களஞ்சியத்தின் மேல் குண்டுபட்டு, வெடித்து மூழ்கிவிட்டது. மற்றொரு 9,000 டன் எடையுள்ள வியாபாரக் கப்பல் பலத்த சேதமடைந்தது. ஸ்வீடனுக்கு அருகாமையில் மூன்று ஜெர்மன் கப்பல்கள் நீர் வெடி குண்டுகள் பட்டு மூழ்கின. ரையோ டி ஜெனீரோ (தென் அமெரிக்கா)வை விட்டுப் புறப்பட்ட 7,209 டன் எடையுள்ள 'ஹெர்மிஸ்' என்ற ஜெர்மன் கப்பல், பிரிட்டிஷ் பொருளாதார முற்றுகையைக் கடந்து ஹாம்பர்க் (ஜெர்மனி) துறைமுகத்திற்குச் செல்ல முயற்சி செய்தது. ஆனால் பிரிட்டிஷ் கடற்படை அதைத் தடுத்து அதிலுள்ள ஆபீசர்கள் உள்பட யாவரையும் கைதியாக்கிற்று. இந்த கப்பல் பாரமான சாமான்களை ஏற்றிக்கொண்டு போனதாகத் தெரிகிறது.

1,200 டன் எடையுள்ள ஆக்லெண்ட் என்ற பிரிட்டிஷ் யுத்தக்கப்பல் முழுகடிக்கப்பட்டது. இது 1938-ல் கட்டப்பட்டது. கப்பலிலுள்ளவர்களின் உறவினர்களுக்கு மூழ்கிய சமாச்சாரம் அறிவிக்கப்பட்டது.

7. தூரக்கிழக்கு அரங்கம்.

பட்டாவியா (ஜாவாவிலுள்ளது) விலிருந்து வெளியேறிய 675 ஜெர்மன் பெண்மக்களும், குழந்தைகளும் ஜப்பானிய நீராவிக்கப்பல் 'அஸ்மாரு' மூலமாக ஷாங்கேயில் (சீனாவில் உள்ளது) வந்திறங்கினர். அந்த நகரத்திலுள்ள ஜெர்மன் குடும்பங்கள் இவர்களுக்கு ஆதரவளித்தன. இவர்களுள் சிலர் ஜப்பானுக்குப் புறப்பட்டனர்.

கிழக்குச் சீன ரயில்வேயின் பழைய டைரக்டரான சி. ஒ. வாங் என்பவர், நான்கு வருட யுத்தத்திற்குப் பிறகும் ஜப்பான் சைனாவை அடிக்கத் தயங்குகின்றது என்றும் கூறி, பிரிட்டனும், அமெரிக்காவும், சைனாவைத் தோற்கடிக்க ஜப்பானுக்குப் பெட்ரோல் சப்ளை இன்னும் ஏன் செய்துக்கொண்டிருக்க வேண்டும் என்று கேட்கின்றார். இந்த பிரச்னை பார்லிமெண்டில் கவனிக்கப்படுமென்று தெரிகிறது.

சீனாவிற்குப் பத்து லக்ஷ டாலர் மதிப்புள்ள மருந்து சாமான்களை அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் உடனே துரிதமாக அனுப்ப ஏற்பாடுகள் செய்து வருகிறது. அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராகிய நார்மன் டேவிஸ் என்பவர் பஸிபிக் சமுத்திரத் துறைமுகங்களைவிட்டுப் புறப்படும் முதற்கப்பலில் இந்த மருந்துகள் சீனாவிற்கு உடனே அனுப்பப்படுமென்று தெரிவித்தார். இதுவரையில் 35 லக்ஷ டாலர் மதிப்புள்ள மருந்துகள் சீனாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

நெதர்லண்டு கிழக்கிந்திய தீவுகளிலிருந்து ஜப்பான் நீண்ட காலமாக சர்க்கரை வாங்காததினால் ஜாவா சர்க்கரை பெருவாரியாக ஜப்பானுக்கு ஏற்றுமதியாகும் என்று ஜப்பானிய பத்திரிகைகள் கூறுகின்றன. வருகிற ஜூலை மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் வரையில் ஒரு லக்ஷம் டன் எடையுள்ள சர்க்கரை ஜாவாவிலிருந்து ஜப்பானுக்கு அனுப்பப்படுமென்று தெரிகிறது.

இந்து-சீனாவிலுள்ள ஜப்பானியர்கள் கொடுமையாக நடத்தப்படுகின்றனர் என்று ஜப்பானிய பத்திரிகைகளில் கூறியிருப்பதனால் பிரிட்டிஷ் சர்க்காரும் நிலைமையை கூர்ந்து கவனித்து வருகின்றனர்.

ஜப்பான் அரசகுமாரர் கோனோயியின் மந்திரிசபை இராஜினாமா செய்துவிட்டது. இந்த நெருக்கடியான நிலைமையில் அதிக வலிமையுள்ள புதிய மந்திரிசபை அமைக்கும் பொருப்பு, பழைய முதல் மந்திரிக்கே கொடுக்கப்பட்டது.

8. விஷி.

ஜெனரல் வீகண்டு விஷிக்குப்போயிருக்கிறார். விஷியின் 6,000 டன் எடையுள்ள யுத்த முஸ்தீபுள்ள வர்த்தக கப்பலும், மற்றொரு சிறிய யுத்தகப்பலும் துருக்கி துறைமுகத்தில் கைப்பற்றப்பட்டன என்றும் அந்த கப்பல்கள் துருப்புகளையும் யுத்த தளவாடங்களையும் ஏற்றிக்கொண்டு பெரூட் (சிரியாவின் துறைமுகம்) டிலிருந்து புறங்காட்டி ஓடினவென்றும் அங்காரா (துருக்கித் தலைநகரம்) அறிக்கை கூறுகின்றது.

லண்டன் 'டெய்லி ஹெரால்ட்' பத்திரிகையின் பாரிஸ் (பிரான்ஸ்) நகர பழைய நிருபராகிய விக்டர் ஷிப், பிரஞ்சு-ஜெர்மன் கூட்டுறவைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

பாரிஸில் அட்மிரல் தார்லான் ஜெர்மனியுடன் சிநேகபாவமான ஒப்பந்தத்தைச் செய்ய ஏற்பாடு செய்துவருகின்றார். நாஸி திட்டம் பின்வருமாறு: பிரஞ்சு தேசத்திலுள்ள அல்சேஸ், லொரெய்ன் பட்டணங்களை ஜெர்மனி சேர்த்துக்கொள்வது ; இங்கிலீஷ் கால்வாயிலுள்ள பிரஞ்சு கடல் தளங்கள் எல்லாவற்றையும் எவ்வளவுகாலம் வேண்டுமானாலும் உபயோகப்படுத்திக்கொள்வது ; பிரஞ்சு குடியேற்ற நாடுகளும் ஜெர்மன் தலைமையின் கூட்டு ஆதிக்கத்திலிருப்பது.

புதிய ஐரோப்பிய பொருளாதாரப் பகுதியில் பிரஞ்சு கைத்தொழிலும் ஜெர்மன் ஆதிக்கத்தின் கீழிருப்பது ; மேற்கூறியவற்றிறகுப் பதிலாக பிரான்சுக்கு ஜெர்மனி பெல்ஜியதேசத்தின் வலூன்பகுதியைக்

கொடுக்கும். இங்கிலீஷ்—ஜெர்மன் யுத்தத்தில் பிரான்ஸ் நடுநிலைமை வகிக்க உரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது.

பிரிட்டனுடன் தீவிர யுத்தத்தில் ஈடுபடுவதுதான் பிரஞ்சு கடற்படையின் வேலையாயிருக்கும் என்று சுயேச்சை பிரஞ்சுக்காரர் கூறுகின்றனர். இந்த நிபந்தனைகள் விஷியில் பரபரப்பை உண்டாக்கியிருக்கின்றன வென்று அந்த பாரிஸ் நிருபர் கூறுகின்றார்.

மார்ஷல் பீதான் தலைமையில் பிரஞ்சு மந்திரி சபைகூடி தற்கால நிலைமைகளைப்பற்றி ஆலோசித்தார்களென்று தெரிகிறது.

பிரான்சின் தற்கால வாழ்க்கையைப்பற்றி பெர்லினர் டக்பிளாட் என்ற பத்திரிகையில், பொது மக்கள் யுத்த செய்திகளில் மிகவும் அசிரத்தையாக இருக்கின்றனரென்றும், சிரியா யுத்தத்தைப்பற்றி கூட நூற்றுக்கு 80 பேர்கள் கவனிப்பதேயில்லையென்றும், அவர்கள் சமாதானத்திற்காகவே பிடிவாதமாக காத்துக்கொண்டிருக்கின்றனரென்றும், பழைய நிலைமை மீண்டும் திரும்ப வரக் கூடுமென்று பதில் நம்பிக்கை கொண்டிருக்கின்றார்களென்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஒழுங்காக மாதச்சம்பளம் பெற்றுவருபவர்கள்தான் விஷி ஆளுகையில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள். உணவு விஷயத்திலாவென்றால், பட்டினிகிடப்பது, வேண்டிய அளவு ரொட்டி, காய்கறி, பழ வகையினால் தவிக்கப்பட்டுவருகின்றது. விலைவாசிகள் அதிகம்; ஹோட்டல்களில் சிறந்த உணவு வகைகள், தனவந்தர்களுக்கே கொடுக்கப்படுகின்றன.

துருக்கியைச்சேர்ந்த அலெக்ஸாண்டிரெட்டா துறைமுகத்தில் சிறைப்படுத்தபட்ட பதினேறு பிரஞ்சு கப்பல்களையும், அக்கப்பல்களுடன் கைதியான 200 பேர்களையும் விடுவிக்கவேண்டிய ஏற்பாடுகளை விஷி அரசாங்கம செய்துவருகின்றது. சிறைப்படுத்தப்பட்ட கப்பல்களில் அநேகமாக சாதாரண கப்பல்களாயிருக்கின்றனவென்றும் யுத்த கப்பல்கள் ஐந்துதானிருக்கின்றனவென்றும் அதனால் அவைகளை விட்டுவிட வேண்டுமென்றும் துருக்கியை விஷி அரசாங்கம் கேட்கின்றது.

பிரஞ்சு குடியேற்ற நாட்டு எல்லைக்குள் நாஸிகளின் தூண்டுதலின் பேரில் சிறைப்பட்ட பிரிட்டிஷ்காரர்களை விஷி அரசாங்கம் விடுதலை செய்தது. இவர்கள் உடனே மேற்கு ஆப்பிரிக்க துறைமுகத்துக்குச் சென்று அங்கு மூழ்கடிக்கப்பட்ட பிரிட்டிஷ் கப்பல்களிலிருந்து சிறைப்பட்டவர்களுடன் சேர்ந்து ஆபீசர்களும் மாலுமிகளும் உள்பட மொத்தம் 400 பேர் பிரிட்டனில் வந்திறங்கினர். அவர்களுள் பெரும்பாலோர் தங்களுடைய உடைமைகளெல்லாவற்றையும் இழந்துவிட்டனர்; உஷ்ணப்பிரதேச உடைகளையே அணிந்திருந்தனர்.

9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

போலந்தின் தலைநகராகிய ராக்கியூங்க்ஸுக்கு அமெரிக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் போலந்து மக்களின் தியாக சக்தியைக் பற்றிப் பாராட்டுச் செய்தி அனுப்பியிருக்கிறார். சென்ற இரண்டு வருடங்களாக, போலந்து மக்கள் சுதந்திரத்திற்காகப் பட்ட கஷ்டங்களும், செய்த தியாகங்களும், அமெரிக்க மக்களுக்கு மட்டுமல்ல, உலகத்தில் உள்ள எல்லாத் தேச மக்களுக்கும், முடிவில் உலகத்தில் சமாதானம் நிலவி தேசங்கள் ஒன்றோடொன்று சிநேகப்பான்மையுடனிருக்கும் என்ற நம்பிக்கையை உண்டாக்கியிருக்கின்றது என்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறினார்.

10. நடுநிலைமை நாடுகள்.

ஜிப்ரால்டருக்கு அருகிலுள்ள லா லினியா என்ற ஸ்பானிஷ் பட்டணத்தின்மேல் இத்தாலிய விமானமொன்று குண்டுகளைப் போட்டது. இதனால் ஆறு பேர் இறந்தனர்; பட்டணத்திலிருந்து வந்து கொண்டிருந்த தொழிலாளர்களுள் சுமார் 20 பேர் காயமடைந்தனர். விமானம் மிகவும் கீழாகப் பறந்தது. லா லினியா பட்டணம் ஜிப்ரால்டராயிருக்குமென்று குண்டுகள் போடப்பட்டன என்று தெரிகிறது. போடப்பட்ட குண்டுகளில் வெடிக்காமலிருந்த குண்டை ஆராய்ச்சி செய்து பார்த்ததில் இத்தாலிய குண்டுதான் என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆல்ஜிசிராஸ் கவர்னருக்கு வேண்டிய மருந்துகளை அனுப்புவதாகவும் தன்னுடைய அனுதாபத்தைத் தெரிவிப்பதாகவும் ஜிப்ரால்டர் கவர்னராகிய லார்ட் கோர்ட் பிரபு செய்தி அனுப்பினார்,

அயர்லாந்து யுத்தத்தில் நடுநிலைமை வகிக்கும் என்று டி வேலரா காமன்ஸ் சபை விவாதத்தில் மீண்டும் வற்புறுத்திக் கூறினார்.

ஸ்பெயினின் தலை நகராகிய மாட்ரிட்டிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீக காரியாலயம் தாக்கப்பட்டதைப் பற்றி, ஸ்பானிஷ் சர்க்கார் மன்னிப்புக் கேட்டார்களென்றும், இதன் காரணகர்த்தர்கள் தண்டிக்கப்பட்டார்களென்றும் பிரிட்டிஷ் வெளிநாட்டு உதவி மந்திரியாகிய மிஸ்டர் பட்லர் காமன்ஸ் சபையில் தெரிவித்தார்.

அட்லாண்டிக் கடலிலுள்ள அஸோர்ஸ், கேப் வெர்டி தீவுகள் போர்சுகீஸியர் ஆதிக்கத்திலிருக்கவேண்டுமென்று அமெரிக்கா பெரிதும் விரும்புகின்றதென்று மிஸ்டர் சம்னர் வெல்ஸ் வாஷிங்டனில் நடந்த பத்திரிகைகள் மகாநாட்டில் கூறினார்.

11. ரஷ்யாவும், ஜெர்மனியும்.

ரஷ்யாவில் மூன்று முக்கியமான பட்டணங்களைப் பிடித்துவிடுவது என்ற நோக்கத்துடன் ஜெர்மனி போர் புரிந்து வருகிறது. வடக்கில் லெனின் கிராட், மத்தியில் ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோ, தெற்கில் யூக்ரெயின் மாகாணத்தின் தலைநகரான கீவ்—இந்த மூன்று லட்சியங்களை நோக்கி ஜெர்மானியர்கள் போர் புரிகின்றார்கள். லெனின் கிராடுக்குத் தென்கிழக்கில் பிஸ்கோவ், பார்கோவ், பகுதிகளில் கடுமையான யுத்தம் நடைபெறுகிறது. அதற்குக் கிழக்கில், ஸ்மோலென்சிக், மாஸ்கோ, லட்சியங்களை நோக்கிச் செல்ல முயற்சிக்கும் ஜெர்மன் துருப்புகள் பார்கோவ், விடபெஸ்க், பிரதேசங்களில் சண்டையிடுகின்றன. தெற்கில், கீவ் என்ற பட்டணத்துக்கருகில் நோவோ கிராட்—வோலின் செக் பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் போர் புரிகிறார்கள். இந்த மூன்று பிரதேசங்களிலும் ஜெர்மன் துருப்புகளின் முன்னேற்றம் தடைப்படுத்தப்பட்டு, ஜெர்மன் துருப்புகளுக்கு ஏராளமான நஷ்டம் உண்டாக்கப்பட்டது.

முதல் பகுதியான பிஸ்கோவ்—பார்கோவ் பிரதேசத்தில் ஜெர்மன் மோட்டார் படைகளை, ரஷ்யத்துருப்புகள் வளைத்துச் சுற்றிக்கொண்டு பகுதிபகுதியாக நாசம் செய்துவிட்டன. அநேக 'டாங்கி'கள், மோடார் ட்ரக் வண்டிகள், யுத்த சாமான்கள் கைப்பற்றப்பட்டன. மற்ற ஜெர்மன் துருப்புகள் மேற்கு நோக்கிப் பின்தாங்கிச் செல்லும்படியாக, கடுமையாகத் தாக்கப்பட்டன.

இரண்டாவது பகுதியான விடபெஸ்க் பிரதேசத்தில், ஜெர்மனியின் மோடார் படைகளும், 'டாங்கி'ப் படைகளும் கிழக்கு நோக்கிச் செல்ல முயற்சித்தது தடுக்கப்பட்டது. இரண்டு பக்கங்களிலும் அதிக நஷ்டம் ஏற்பட்டது.

மூன்றுவது பகுதியான நோவோகிராட்—வோலின் செக் பிரதேசத்தில், முன்பு முன்னேறிச் சென்ற ஜெர்மன் 'டாங்கி'ப் படையுடன் சேர்வதற்கு முயற்சிக்கும் ஜெர்மன் துருப்புகளுடைய முன்னேற்றம் தடைப்படுத்தப்பட்டது. ரஷ்யத்துருப்புகள் கடுமையாகப் போர் புரிந்துகொண்டு வருகின்றன.

மேலே குறிப்பிட்ட விவரங்கள் ரஷ்ய சமாச்சார சபையிலிருந்து வெளியிடப்பட்டவை. ஜெர்மனியின் சமாச்சார அறிக்கைகள் வரவர மிகச் சுருக்கமாய் விட்டன. கடைசியாக வெளியிடப்பட்ட ஒரு ஜெர்மன் அறிக்கை கூறுவதாவது:—"கிழக்கரங்கத்தில், யுத்தப்போக்கு ஜெர்மனிக்கு அனுகூலமான முறையில் போய்க்கொண்டிருக்கிறது. பல இடங்களில் கடுமையான ரஷ்யத்தாக்குதல்கள் திருப்பியடிக்கப்பட்டன. எதிரிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்படுத்தப்பட்டது."

ரஷ்ய யுத்தம் ஆரம்பித்த நான்காவது வாரத்தில் ஜெர்மானியர்கள் அதிகமாக முன்னேற முடியவில்லை; அவர்களுடைய துருப்புகளுக்கும், யுத்த சாதனங்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட நஷ்டம் அவர்கள் பெற்ற லாபத்துக்குமேல் மிக அதிகமாக இருக்கிறது—என்று ஒரு பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி கூறுகிறார். ஜெர்மனியின் பிரசார ஸ்தாபனம், ஜெர்மன் பட்டாளம் முன்னேற்றமடைந்தால் அது அளவுக்கு மிஞ்சி அதிகமாகக் கூறுகிறது.

ரஷ்ய யுத்தத்தில் இறந்து போனவர்களுடைய ஜாபிதாக்கள் ஜெர்மன் பத்திரிகைகளில் தினந்தோறும் பிரசுரிக்கப்படுகின்றன. ஒரு ஜெர்மன் காலாட்படையின் தளகர்த்தராயிருந்த ஜெனரல் ஓட்டோ லெனுல் என்ற பிரபல தளகர்த்தர் ரஷ்ய

சீனுவில் ஜப்பானியர் ஆக்ரமித்த பாகங்களை விளக்கும் படம்

அளவு 1 அங்குலம் = 240 மைல்கள்

Heliozinco., Survey Office, Madras 1941.

Reg. No. 73/2 Copies 9700

சுதந்தர பிரான்ஸைச்சேர்ந்த ஆகாய விமானிகள் லிபிய வெற்றிக்குப் பாடுபடுகிறார்கள் !



சுதந்தர பிரான்ஸின் ஆகாய விமானப்படை, பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையுடனும் பிரிட்டிஷ் கப்பற்படையுடனும் சேர்ந்துகொண்டு, பார்டியா, காபுஸா கோட்டை ஆகியவைகளைத் தாக்குவதற்காக, மேற்கு பாலைவனத்தில் தளகர்த்தரின் உத்தரவுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் காட்சி.

யுத்தத்தில் இறந்துபோனார் என்று அறிவிக்கப்பட்டது. ஜெர்மனியின் தலைசிறந்த பாராட்டுப் பதக்கமான "பூர்லுபிரைட்" (திறமைக்காகப் பரிசு) இவருக்குக் கொடுக்கப்பட்டது.

ரஷ்யாவில் ஜெர்மானியர்களுடைய நஷ்டம், போலந்து, பிரான்சு, பால்கன், கிரீட், இந்த யுத்தங்களில் ஏற்பட்டதைவிட அதிகமானது என்று ஜெர்மனியின் பாரிஸ் ரேடியோ நிலையம் ஒப்புக்கொள்ளுகிறது.

ரஷ்ய யுத்தம் நீண்டதாகவும் இன்னும் கடுமையானதாகவும் இருக்கும் என்று இத்தாலிய ஜெனரல் அம்புரோகுயோ போலட்டி, ரோம் பத்திரிகை 'பிகாலோ' மூலமாக இத்தாலியர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்.

சென்ற வாரத்தில் கையெழுத்திடப்பட்ட ஆங்கிலோ - ரஷ்ய ஒப்பந்தம் உலக சரித்திரத்திலேயே மிக முக்கியமானது. ஜூலை 13-ந் தேதி இரவு மாஸ்கோவில் கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் இரண்டு நிபந்தனைகளுடையது. அவையாவன :—

(1) பிரிட்டிஷ் அரசாங்கமும், ரஷ்ய அரசாங்கமும், நாஜி ஜெர்மனிக்கு விரோதமாக நடக்கும் யுத்தத்தில் ஒருவருக்கொருவர் எல்லாவித உதவியும் செய்யவேண்டும்.

(2) யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது, எந்த விதமான சமாதானப் பேச்சோ அல்லது சமாதான உடன்படிக்கையோ இரண்டு அரசாங்கங்களின் ஏகோபித்த அபிபபிராயத்தின்படிதான் செய்ய வேண்டும்.

சீன-ஜப்பான் யுத்தம்: 5-ம் ஆண்டு ஆரம்பம்.

யுத்தப்போக்கு விவரங்கள் : சீனாவின் தைரியப்போராட்டம்.

"சீனாவைத் தோற்கடிக்கமுடியாது" மார்ஷல் சியாங்கே ஷேக்கின் வீரமொழி.

சீனாவின் ஒற்றுமையும், பலமும் : ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா உதவி.

ஜப்பான் சீனாவுடன் போர் தொடுத்து நான்கு வருஷங்கள் முடிந்து, ஐந்தாவது வருஷம் ஆரம்பமாயிருக்கிறது. இந்த நான்கு வருஷமாக, சீன தேசம் தன்னுடைய சுதந்தரத்தைக் காப்பாற்றுவதற்காக, தன்னைவிட பலமான எதிரியுடன் சளைக்காமல் போராடிக்கொண்டு வருகிறது. சீனாவைத் தோற்கடிக்கமுடியாது என்று சீனத் தலைவர், மார்ஷல் சியாங்கே ஷேக் கூறுகிறார். சீனா பயமுறுத்தலுக்கு அஞ்சாது ; தந்திரமான சமாதான ஏற்பாடுகளுக்கும் ஒப்பாது ; புரட்சி உணர்ச்சி வீறிட்டு எழுந்து நிற்கும் சீனாவுக்கு தோல்வி என்பது தெரியாது என்று மார்ஷல் சியாங் ஒரு வாரத்துக்கு முன்பு கூறியிருக்கிறார். பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, சீனா முதலிய நான்கு தேசங்களும் ஒன்றுசேர்ந்து, சுதந்தரத்தையும், குடியரசையும் அடியோடு ஒழிக்க நினைக்கும் எதேச்சாதிகாரப்பேயை ஒழிக்கவேண்டும் என்று அவர் சொன்னார்.

தூரக்கிழக்கு அரங்கத்தில், எதேச்சாதிகார அதிக்கிரமம் செய்வது ஜப்பான்தான். நான்கு வருஷங்களுக்குமுன் அநியாயமாக சீன தேசத்துடன் ஜப்பான் சண்டையிட ஆரம்பித்தது. இந்தச் சண்டையைப்பற்றிய விவரங்கள் ருசிகரமும், பரிதாபகரமும் பொருந்தியவை.

1937-ம் வருஷம் ஜூலை மீ 7உ, ஜப்பானிய வடக்குச் சீனா பட்டாளத்தின் தளகர்த்தர், லூகோசியோ என்ற இடத்திற்கருகிலுள்ள மார்கோபோலோ பாலத்திற்கருகில் யுத்தப் பயிற்சி பழக்கவேலைகளைச் செய்துகொண்டிருந்தார். அப்போது இராக்காலம். தன்னுடைய பட்டாளத்தைச்சேர்ந்த மனிதர்களில் ஒருவனைக் காணோம் என்பதைக் கவனித்தார். உடனே சீன துருப்புகள்தான் அவனைக் கைப்பற்றிக் கொண்டு போயிருக்கவேண்டும் என்று தானே நிச்சயித்துவிட்டு, அருகிலிருந்த சீனப்பட்டணத்தில் தன்னுடைய துருப்புகள் பிரவேசிப்பதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்டார். அந்தப் பட்டணம் நான்கு பக்கமும் உயர்ந்த சுவர்களால் சூழப்பட்ட பட்டணம். ஜப்பானிய தளகர்த்தர் கேட்ட அனுமதி நியாயமாக மறுக்கப்பட்டது. சீனர்கள் வேண்டுமென்றே ஜப்பானியர்கள் மேல் துப்பாக்கிகளால் சுட்டார்களென்றும், அதனால் ஜப்பானியர்கள் திருப்பிச் சுடும்படி நேர்ந்ததென்றும், பின்னர் ஜப்பான் கிழக்கு ஆசியாவில் "புதிய சமுதாயத் திட்டம்" ஏற்படுத்துவதற்காக, $11\frac{1}{4}$ லட்சம் சிப்பாய்களை அனுப்பும்படி நேர்ந்ததென்றும் ஜப்பானியர்கள் கூறினார்கள். 10 மைலுக்கப்பாலுள்ள பீபிங்குக்கு அருகிலிருக்கும் பெங்டேயிலிருந்து ஜப்பானியத் துருப்புகள்

அதிவிரைவாகக் கொண்டுவரப்பட்டன. அடுத்தநாள் காலையிலும், இடைக்கிடையே நாள்முழுவதும், ஜப்பானிய பீரங்கிகள் பட்டணத்தைத் தாக்கின.

சீன அரசாங்கம் இந்தத் தாக்குதலை ஆட்சேபித்து, ஜப்பானிய அரசாங்கத்துக்கு ஒரு அறிக்கையை அனுப்பிற்று. வடக்கு சீனவில், 1931-ம்வருஷத்தில் ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றின நாள் முதல் ஜப்பானியத் துருப்புகள் தங்கியிருக்கின்றன. அந்தத் துருப்புகள் சீன அரசாங்கத்துக்குத் தொந்தரவு கொடுக்கும்படியான நடவடிக்கைகளைச் செய்துவருகின்றனவென்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. பீபிங், டீன்ட்சின் பட்டணங்கள் ராணுவச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன.

ஜப்பானிய மந்திரிசபை அறிக்கை.

ஜூலை மீ 9உ (1937), ஒரு தற்காலிக சமாதான நிபந்தனைகளைப்பற்றிப் பேசலாம் என்ற ஒப்பந்தம் இருக்கும்போதே, டோக்கியோவில் ஜப்பானிய மந்திரி சபை ஒரு முடிவுக்கு வந்துவிட்டது "வடக்கு சீனுக்கு ராணுவப் பட்டாளங்கள் அனுப்புவதற்கு அவசியமான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும்" என்று அம்மந்திரி சபை அறிவித்தது. ஜூலை மீ 12உ மறுபடியும் சண்டை நடந்தது. டோக்கியோவிலிருந்து உதவித்துருப்புகள் அனுப்பப்பட்டன. வடக்கு சீனவை இரண்டாவது மஞ்சூரியாவாக்கிவிடவேண்டுமென்ற எண்ணத்துடன் ஜப்பான் வேலை செய்கிறதென்று லண்டனிலுள்ள சீன ஸ்தானீகர் கூறினர். மஞ்சுகூவோவிலிருந்து வந்த ஜப்பானியத்துருப்புகளுக்கும், நான்கிங்கிலிருந்துவந்த சீனத்துருப்புகளுக்கும், வாங்பிங் என்ற இடத்தில் ஜூலை மீ 20உ சண்டை நடந்தது. ஜூலை மீ 28உயில் சண்டை மும்முரமாயிற்று. பீபிங் என்ற பட்டணம் ஜப்பானிய வெடிகுண்டு விமானங்களால் தாக்கப்பட்டது.

ஜூலை மீ 29உ, மார்ஷல் சியாங்கேஷெக் ஒரு யுத்த முஸ்தீப்பு அறிக்கையை விடுத்தார். "கடைசி மனிதன் உள்ளவரை, சீன உறுதியுடன் போரிடுவதற்குத் தீர்மானித்துவிட்டது. நம்முடைய தாய் நாட்டைக் காப்பதற்காக எல்லோரும் தங்களுடைய முழுபலத்தையும் உபயோகித்துச் சண்டை செய்யவேண்டும் என்று நான் அழைக்கிறேன்," என்று சீனவின் மா பருந்தலைவர் நாட்டு மக்களை அழைத்தார். அன்றை தினமே, ஜப்பானியர்கள் பீபிங்கைக் கைப்பற்றி விட்டார்கள். அடுத்த நாள் டீன்ட்சின் பிடிக்கப்பட்டது.

ஆகஸ்ட்டு மாதம் 9-ம் தேதி, ஷாங்கேயில் நடந்த ஏதோ ஒரு சம்பவத்தைப் பின்பற்றி, ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியில் ஜப்பானியர்கள் அந்தத்துறைமுகத்தைத் தாக்கினார்கள். யுத்தம் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. ஷாங்கே சண்டை நவம்பர் மாதம 9-ம் தேதி (1937) வரை நடந்தது. சென்ற உலக மகா யுத்தத்தில் நடந்த வர்டன் சண்டைக்குப் பிறகு, இம்மாதிரியான சண்டை நடந்ததேயில்லை; லட்சக்கணக்கான மக்கள் இதில் இறந்துபோனார்கள். சீனர்கள் கடுமையாக போர் புரிந்தார்கள். ஆனால் முடிவில் ஷாங்கேயை இழந்துவிட்டார்கள். டிஸம்பர் மாதம் 13-ம் தேதி சீனவின் தேசீயத்தலைநகரமான நான்கிங் இழக்கப்பட்டது. நான்கிங்கைக் கைப்பற்றியது, கொலை, கொள்ளை, கற்பழித்தல், பொருள்களை நாசம் செய்தல், இம்மாதிரியான கொடுமைகளை ஜப்பானியர்கள் செய்தார்கள். இதன்பயனாக, ராணுவசம்பந்தமில்லாத 50,000 சீனர்கள் கொல்லப்பட்டார்கள்.

'பானே' சம்பவம்: நஷ்டயீடு.

இதல்லாமல், அயல்நாடுகளுக்கு வருத்தம் உண்டாகும்படியாக, ஜப்பானியர்கள் மிகக்கொடூரமாக சில காரியம் செய்தார்கள். டிசம்பர் மாதம் 12-ந் தேதி (1937) நான்கிங்குக்கு அருகாமையில் உள்ள யங் டீசிலிருந்த அமெரிக்க பீரங்கிக்கப்பல் "பானே"யை வெடிகுண்டுகளால் தாக்கி முழுகடித்து விட்டார்கள். முழுகும் கப்பலிலிருந்து உயிர்தப்பமுயற்சித்தவர்களை யந்திர பீரங்கிகளால் சுட்டார்கள். ஜபபானிய சிப்பாய்கள் செய்தவேலையைக்கண்டு ஜப்பானிய அரசாங்கமே பயந்துவிட்டது. "பானே" கப்பல் சம்பவத்தைப்பற்றி அமெரிக்க அரசாங்கம் தன்னுடைய ஆட்சேபனையைத் தெரிவித்து, நஷ்ட ஈடு கொடுக்கும்படி கேட்டது. அமெரிக்கா கேட்ட 442,8 1 பவுன் நஷ்டத்தை ஜப்பானிய அரசாங்கம் பேசாமல் கொடுத்துவிட்டது.

வடக்கு சீனவை ஜெயித்துவிட்டால், நான்கிங் அரசாங்கத்தைக்கவிழ்த்துவிடலாம் என்ற ஜப்பானின் எண்ணம் நிறைவேறவில்லை. மார்ஷல் சியாங்கே ஷேக்கின் அரசாங்கத்தை அழித்து விட்டு, வேறொரு பொம்மை அரசாங்கத்தை ஜப்பான் ஏற்படுத்தியது. அதனாலும் சமாதானம் வந்தபாடில்லை. ஆகையால் சீன தேசமுழுவதையுமே கைப்பற்றிவிடுவது என்று ஜப்பான் தீர்மானித்தது.

மார்ஷல் சியாங்கேஷேக் ஒரு யுத்ததந்திர முறையைக் கையாண்டு ஜப்பானிய சேனைகளுக்கு எவ்வளவு செலவும், தொந்தரவும், கஷ்டமும் கொடுக்க முடியுமோ அவ்வளவும் கொடுத்தார். கடுமையாக யுத்தம் செய்வது, பிறகு பின்வாங்கி ஓடுவது, மறுபடியும் நின்று சண்டைசெய்வது, மறுபடியும் பின்வாங்குவது, இம்மாதிரியாக ஜப்பானியர்கள் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி, அதிக செலவை உண்டாக்கினர்.

1938-ம்வருஷ மார்ச்சுமீ, சீனத்துருப்புகள் முன்னேறிச் சென்று, தேயர் சுவாங் (ஷான்டங் மாகாணம்) என்ற இடத்தில் ஒரு பாராட்டத்தக்க வெற்றியை அடைந்தன. ஆனால் ஜப்பானியர்கள் தங்களுடைய ராணுவ பலத்தின் உதவிகொண்டு, ஹோபே—ஷான்டங் பிரதேசம், வுசிசூலுங்காய் ரயில்வே, மார்ஷலினுடைய புதிய தலைநகரமான ஹாங்கோ முதலியவற்றை அக்டோபர் மாதத்திற்குள் பிடித்துவிட்டார்கள், சீன தேசத்துக்கு சுங்கிங்கைப் புதிய தலை நகராக மார்ஷல் ஏற்படுத்தினர். அக்டோபர்மீ 12உ, ஜப்பானியர் கான்டனைக்கைப்பற்றினர்கள். சீனவினுடைய கரையோரப் பிரதேசம், ஹைனன் தீவு முதலியவைகள் 1938 ம்வருஷத்தில் கைப்பற்றப்பட்டன சுங்கிங்கின்மேல் ஏராளமாக ஜப்பானிய வெடிகுண்டுகள் போடப்பட்டன. இவைகளெல்லாம் சீன தேசத்து மக்களுடைய மன உறுதியை அதிகப்படுத்தினவே ஒழிய, ஒரு சிறிதும் குறைக்கவில்லை.

பர்மா ரோட்டு ஒப்பந்தம்.

1939-ம்வருஷ வெய்யிற் காலத்தில் ஷான்சி மாகாணத்தில் சாங்ஷா முதலிய இடங்களில் சீனர்கள் மெச்சத்தகுந்த வெற்றிகளை அடைந்தார்கள். ஆனால் கூடிய சீக்கிரம் அவர்கள் நான்னிங்கையும், இச்சாங்கையும் கைப்பற்றினர்கள். 1940-ம்வருஷ மார்ச்சுமீ நான்கிங்கில், வாங்சிங்வீ என்ற சீனத்தலைவரை ஒரு பொம்மை அரசாங்கத்தின் தலைவராக நியமித்தார்கள். ஜூன்மீ 24உ மிஸ்டர் அரிடா என்ற ஜப்பானின் அயல் நாட்டு மந்திரி, பர்மா ரோட்டு வழியாக யுத்த சாமான்கள் வருவதைத் தடுக்கவேண்டுமென்று பிரிட்டனைக் கேட்டார். ஜூலைமீ 18உ ஆங்கிலோ—ஜப்பானிய ஒப்பந்தத்தின்படி பர்மா ரோட்டு, யுத்த சாமான்களுக்கு மூன்று மாத காலம் மூடப்பட்டது.

ஜூலைமீ 17உ ஜப்பானிய முதல் மந்திரி, அட்மிரல்யோனை, ராஜிநாமா செய்தார். அரச குமாரர் கோனேயி முதல் மந்திரியானர், மிஸ்டர் மதசூகா அயல் நாட்டு மந்திரியானர். பின்பு பிரிட்டனுக்கும் ஜப்பானுக்கும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. அமெரிக்காவிலிருந்து பெட்ரோலும், ஸ்டீலும் அனுப்படுவது தடுக்கப்பட்டது. அமெரிக்கா சீனவுக்கு கோடி டாலர் கடனுகக் கொடுத்தது. செப்டெம்பர்மீ 28உ ஜப்பான் அச்சு நாடுகளுடன பத்து வருஷ உடன்படிக்கை செய்துகொண்டது. பிரிட்டன் பர்மா ரோட்டு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க மறுத்து விட்டது. நவம்பர் 30-ந் தேதி நான்கிங் அரசாங்கத்தை, சீனவின் ஒரே அரசாங்கம் என்று ஜப்பான் அங்கீகரித்தது. அதேசமயத்தில் தான் அமெரிக்கா சீனவுக்குக் கடன் கொடுத்தது. டிசம்பர் 11-ந்தேதி பிரிட்டன் மார்ஷல் சியாங்கின் அரசாங்கத்துக்கு ஒரு கோடி பவுன் கடனுகக் கொடுத்தது.

இந்த வருஷம், (1941) ஜப்பான் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கியதும், ஜப்பானுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சீன தேசத்தில், வேசௌ, சூகி, துங்கௌங், முதலிய இடங்களை ஜப்பான் கைப்பற்றியிருக்கிறது. ஷான்சி பிரதேசத்தில் உள்ள 'கம்யூனிஸ்ட்' (பொதுவுடைமைக் கட்சி) பட்டாளம் இப்

போது சியாங் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கிறது. மூன்று மாதங்களுக்குள் முடித்துவிடுவதாகத் திட்டம்போட்ட யுத்தம், நான்கு வருஷங்கள் கழிந்து, ஐந்தாம் வருஷமும் ஆய்விட்டது. இப்போது பிரிட்டன், அமரிகா, ரஷ்யா முதலிய வல்லரசுகளின் உதவி சீனுவுக்கு வந்துகொண்டேயிருக்கிறது. முன்பு இருந்ததைவிட சீனு இப்போது ஒற்றுமையும் பலமும் அதிகப்பட்டு இருக்கிறது.

மந்திரிசபை ராஜிநாமா.

சென்ற புதன்கிழமை (ஜூலை 16-ந் தேதி) அரசகுமாரர் கோனேயியின் மந்திரிசபை ராஜிநாமா செய்துவிட்டது. கடைசியாக வந்த செய்தியில், அரசகுமாரர் கோனேயியே புதிய மந்திரி சபை அமைக்கப் போகிறுர் என்று தெரிகிறது.

ஜப்பானுடைய சங்கடமான நிலைமை.

ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கியதால், ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட ஜப்பான் ஒரு சங்கடமான நிலைமையில் வைக்கப்பட்டது. ஜப்பானிய அரசியல் நிபுணர்களும், மந்திரி சபையும் கூடி யோசித்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. சென்ற புதன்கிழமையன்று ஜப்பானிய மந்திரி சபை ராஜிநாமா செய்துவிட்டதென்றும், உலக நிலைமைக்குத்தக்கபடி தைரியமாக வேலை செய்யக்கூடிய பலம் வாய்ந்ததொரு மந்திரி சபை ஏற்படப் போகின்றதென்றும் தெரியவருகிறது. மந்திரி சபை மாறுதலுக்காக இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று பிரபல வியாபாரிகள், ஜப்பானிய ராணுவ அதிகாரிகளின் தூண்டுதலின்மேல் ரஷியாவுடனாவது டச்சு கிழக்கிந்திய தீவுகளுடனாவது போர் தொடுத்தால், தங்கள் வியாபாரம் மிகவும் சிதைவுறும் என்பது. மற்றொன்று, வேறொரு மந்திரி சபை வந்தால், அது மிகவும் தைரியமாகவும் தயக்கமின்றியும் வேலை செய்யும் என்பது. இவ்வாருக கூடியசீக்கிரம் ஜப்பானிய உட்நாட்டுக் கொள்கையிலும் வெளிநாட்டுக்கொள்கையிலும் தீவிர மாறுதலிருக்குமென்று சொல்லப்படுகிறது. தூரக்கிழக்கு காங்கத்தில், ரஷ்யாவைத் தாக்கும்படி ஜப்பானை ஜெர்மனி வற்புறுத்துகிறது. ஆனுல் நான்கு வருஷ யுத்தத்திற்குப்பிறகு சீனு, இன்னும் ஜெயிக்கப்படவில்லை. இதல்லாமல் ரஷ்யாவுக்கு, கிழக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் வெகுகாலமாக இருந்துவருகின்றன.

ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய மூன்று நாடுகளும் மூன்றரசு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அந்த ஒப்பந்தத்தில் ரஷ்யா விலக்கப்பட்டது. ஆகையால் ரஷ்யாவுடன் நடக்கும் சண்டையில் ஜப்பான் அச்சு நாடுகளுக்கு உதவிசெய்யவேண்டுமென்ற நிபந்தனை கிடையாது. ஜப்பான் ரஷ்யாவுடன் சென்ற வருஷம் ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி ரஷ்யா யுத்தத்தில் ஈடுபட்டால், ஜப்பான் நடுநிலைமை வகிப்பதாக வாக்களித்திருக்கிறது. அதன்படி ஜப்பான் நடக்குமா?

ஜப்பான் ரஷ்யாவுக்கு எதிராக யுத்தத்தில் பிரவேசித்தால், பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, இவைகளை விரோதித்துக்கொள்ளும். நடுநிலைமையாய் இருந்தால், மேற்கு நாட்டுக் குடியரசுகளுடன் சிநேகபாவமாய் இருந்து, சீனயுத்தத்தைக் கைவிடவேண்டும். இதை ஜப்பானில் இப்போதுள்ள ராணுவத் தலைவர்கள் விரும்பமாட்டார்கள். ஜப்பான் சமயம் எப்படி வருகிறதோ, அதன்படி தனக்குச் சௌகரியமான ஒரு முடிவுக்குவரும். புதிதாக ஏற்படுத்தப்படும் மந்திரிசபை அம் முடிவுக்குக் காரணமாயிருக்கலாம். கூடிய சீக்கிரம் ஜப்பான் மதில்மேற் பூனையாயிருந்த நிலைமையை மாற்றிக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. அமெரிக்காவும் பிரிட்டனும் சைனுவும் நெதர்லெண்ட்ஸ் கிழக்கிந்திய தீவுகளும் எவ்விதமான நிலைமைக்கும் தயாராயிருக்கின்றன. பஸிபிக் மஹா சமுத்திரத்தில் அமெரிக்கா ஒரு பிரம்மாண்ட கப்பற்படை வைத்திருக்கிறது. பிரிட்டிஷ் தூர கிழக்கு ராணுவத்தலைவர், தம் படைகள் எவ்விதமான நிலைமையையும் சமாளிப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறதென்று சமீபத்தில் சொல்லியுள்ளார்.

சுதேச சமஸ்தானங்களும், யுத்த முயற்சியும்.

ராணுவப் பள்ளிக்கூட ஏற்பாடுகளும், அனுப்பப்பட்ட பட்டாளங்களின் விவரங்களும்.

கிழக்காப்பிரிக்காவில் புகழ்பெற்ற கபால சிங்.

இந்திய மன்னர்களுடைய ஆட்சியின் கீழ் இருக்கும் சுதேச நாடுகள், யுத்த முயற்சிக்குப்பெரிதும் உதவி செய்திருக்கின்றன. இதன் விவரங்கள், சமீபத்தில் வெளியிடப்பட்ட "இந்திய சுதேச நாட்டுப் பட்டாள ஆண்டுமலரில்" கூறப்பட்டிருக்கின்றன. ஏப்ரல் 1940-மீ முதலிலிருந்து, ஏப்ரல் 1941-மீ முடிவு வரைக்கும் யுத்த நிதிக்கு 2 கோடியே 29 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதல்லாமல் 37 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் வருஷா வருஷம் கொடுக்கப்பட்டு வருகிறது. 4 குதிரைப் பட்டாளங்கள், ஒரு பீரங்கி பட்டாளம் அடங்கிய ஐந்து 'பேட்டரி' பட்டாளங்கள், 4 'கம்பெனி' துருப்புகள், 'சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்' என்ற பாதை போடுவது முதலிய வேலை செய்யும் ஒரு பட்டாளம், 23 காலாள் பட்டாளங்கள், ஒரு ஒட்டகப் பட்டாளம், மிருகப் போக்குவரத்து சாதன பட்டாளங்கள் மூன்று, பொதுவான போக்குவரத்து சாதனப்பட்டாளங்கள் 11, இரண்டு தொழிலாளர் பட்டாளங்கள், 'ஆம்புலன்ஸ்' என்ற முதல் வைத்திய சிகிச்சைப் பட்டாளங்கள் மூன்று—ஆகிய இவைகளெல்லாம், மேலே குறிப்பிட்ட ஒரு வருஷத்தில், இந்திய சுதேச சமஸ்தானங்களால் யுத்தத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இதே காலத்தில், இன்னும் அநேக பட்டாளங்கள் அனுப்புவதாக இந்திய மன்னர்கள் வாக்களித்தார்கள். இந்தியசுதேச பட்டாளங்கள் 'சிக்னலர்' வேலை செய்துவரும் அநேகர் யுத்தத்திற்குச் செல்வதற்காக முன்வந்தார்கள். அவர்களில் 173 பேர் தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

சுதேச சமஸ்தானங்கள் யுத்த முயற்சிக்கு உதவுவதில் ஒன்றுரொன்று போட்டி போட்டுக்கொண்டு வேலை செய்கின்றன. பயிற்சிச்சாலைகளும், யுத்த முஸ்தீப்பு ஸ்தாபனங்களும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. சமஸ்தான தொழிற்சாலைகளில், யுத்த உடுப்புகள், ஆயுதங்கள், பயிற்சி துப்பாக்கிகள் முதலியன செய்யப்படுகின்றன. ராணுவ உத்தியோகஸ்தர்கள் வேலைக்கு பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. வட இந்தியாவில் உள்ள இந்தூர் சமஸ்தானத்தில் இந்த வருஷம் இதைப் போன்ற ஒரு புதிய பள்ளிக்கூடம் திறக்கப்போகிறுர்கள். அடுத்த வருஷ முதல் மாதங்களுக்குள், சமஸ்தான பட்டாளங்களுக்கு 100 உத்தியோகஸ்தர்களுக்குமேல் பயிற்சி செய்து விடுவார்கள். இந்திய அரசாங்கத்தார் இந்தப் பள்ளிக்கூட முயற்சியைப் பாராட்டி, அதற்கு 2½ லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறுர்கள்; அதல்லாமல், வருஷா வருஷம் 1 லட்ச ரூபாய் கொடுக்க உத்தரவிட்டிருக்கிறுர்கள்.

சிரியாவில் அமைதி.

விஷி அரசாங்கத்தின் ஹைகமிஷனரான ஜெனரல் டெண்ட்ஸ் கனசில் சமாதானத்துக்காக நேசதேசத்தார்களிடம் ஒரு தூது அனுப்பினர். ஏக்கர் என்ற பிரபல பட்டணத்தில், 22 நிபந்தனைகளடங்கிய சமாதான ஒப்பந்தம், பிரிட்டிஷ், விஷி, சுதந்தர பிரெஞ்சு மக்கள், இவர்களின் பிரதிநிதிகளால் கையெழுத்திடப்பட்டது. ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி பிரெஞ்சுத் துருப்புகளுக்கு சகல யுத்த மரியாதைகளும் காட்டப்பட்டன; சிரியாவின் சுதந்தரம் அங்கீகரிக்கப்பட்டது; முக்கியமான

ராணுவ கேந்திரஸ்தானங்கள் நேசதேசத்தார்களிடம் ஒப்படைக்கப்பட்டன; பீரங்கிகள், மோடார்கள், யுத்தசமான்கள், முதலியன பிரிட்டிஷாரிடம் கொடுக்கப்பட்டன; பிரெஞ்சு யுத்தக் கைதிகள் நேசதேசத்தார்களால் விடுதலை செய்யப்படுவார்கள்; பிரெஞ்சு மக்கள் பிரெஞ்சுக் கப்பல்களில் ஏறி தங்களுடைய இடங்களுக்குச் செல்லலாம்.

சென்ற ஜூன் மாதம் 8-ந் தேதி நேசதேசத்தார்கள் சிரியாவில் பிரவேசித்தார்கள். 34 நாள்களுக்குள் சிரியா முழுவதையும் கைப்பற்றி, ஏராளமான விஷித் துருப்புகளை வைத்திருந்த ஜெனரல் டெண்ட்ஸ் சமாதானத்தை விரும்பிக் கேட்கும்படியான நிலைமையை ஏற்படுத்தினார்கள்.

இந்த சமாதான ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட பலன்கள் என்ன? சிரியாவினுடைய வெளிப்பாதுகாப்புகளும், இந்தியாவின் வெளிப்பாதுகாப்புகளும், அச்சு நாடுகளின் ராணுவத் தளங்களாக ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சம் முழுவதும் போய்விட்டது. சிரியர்கள் சுதந்தரம் பெறுவார்கள்; துருக்கிக்கும் ஒரு சௌகரியம் ஏற்பட்டது. அச்சு நாடுகள் துருக்கியை அதிகமாகப் பயமுறுத்தி கட்டாயப்படுத்த முடியாது.

சமஸ்தான ராணுவ உத்தியோகஸ்தர்கள்.

1941-ம் வருஷம் குவெட்டாவிலுள்ள ராணுவ உத்தியோகஸ்தர்கள் கலாசாலையில் பயிற்சி பெறுவதற்கு நான்கு சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1940-ம் வருஷத்தில் டேராடூனில் உள்ள இந்திய ராணுவ கலாசாலையில், சுதேச சமஸ்தானங்களிலிருந்து வந்த 31 மாணவர்கள் தேர்ச்சி பெற்றார்கள். பீரங்கிப்பள்ளிக்கூடத்தில் ஒரு உத்தியோகஸ்தரும், ராணுவ சைகைப்பள்ளிக்கூடத்தில் ஒரு உத்தியோகஸ்தரும், ஏழு பேரும் நற்சாட்சிப்பத்திரம் பெற்றார்கள். இந்தியாவிலுள்ள ராணுவ உத்தியோகஸ்தர்கள் பயிற்சி பெறும் பள்ளிக்கூடங்களில், சுதேச சமஸ்தானங்களிலிருந்து வருஷத்தில் 200 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். யுத்த யந்திர ஆயுதப்பள்ளிக்கூடங்களிலும் சமஸ்தான மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புதிதாகத் தயார் செய்யப்பட்டுவரும் சுதேச சமஸ்தான பட்டாளங்களுக்கு வேண்டிய யுத்த சாமான்கள், ஆயுத முஸ்தீப்புகள் முதலியன இனாமாகவாவது, கடனாகவாவது, அல்லது அசல் விலைக்காவது, பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு குதிரைப்படைகளுக்கு வேண்டிய மோட்டார் வண்டிகள் முதலியவற்றின் இயந்திரத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. 3,000 குதிரைகள் இனாமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சுதேசப்பட்டாளங்களுக்காக உபயோகப்படும் பெட்ரோல் முதலிய எண்ணெய்களின்மேல் உள்ள சுங்க வரியை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். இதல்லாமல், இன்னும் அநேக வழிகளில் சமஸ்தானங்களுக்கு உதவி கொடுக்கப்பட்டு வருகிறது.

சுதேச சமஸ்தானங்களிலிருந்து சென்ற பட்டாளங்களில், ஜம்மு, காஷ்மீரத்திலிருந்து சென்ற மலை பீரங்கிப்படை கிழக்கு ஆப்ரிக்காவில் நடந்த யுத்தத்தில் பெரும் புகழடைந்திருக்கிறது. அதைச் சேர்ந்த கபால சிங் என்பவர் கேரனிலிருந்து அஸ்மாரா வரைக்கும் இத்தாலியர்களைத் தைரியமாகத் துரத்திக்கொண்டு போனதற்காக, ஒரு பாராட்டுச்சின்னம் அளிக்கப்பட்டார்.

மலேயாவில் இந்தியத் தொழிற்படை.

நேரில் கண்ட நிருபர் கூறும் விவரங்கள்.

கடுமையான வேலை: அருமையான பாடல்கள்.

இந்தியப் பட்டாளத்தில் உள்ள பல படைகளில், ஒரு படையைப்பற்றி பொது மக்களுக்கு அதிகமாகத் தெரியாது; அது தான் இந்தியத் தொழிற்படை. ஒவ்வொரு சண்டைக்கு முன்னும் பின்னும், இப்படை முக்கியமான வேலை செய்கிறது. பொழுது விடிந்தது முதல் பொழுது போகும் வரை, பலவிதமான வேலைகள் செய்யப்படுகின்றன. கப்பல்களிலிருந்து சாமான் இறக்குதல், இறக்கின சாமான்களை 'மோட்டார் ட்ரக்' வண்டிகளில் ஏற்றுதல், முதலிய வேலைகள் சாதாரணமானதும், பெருமை இல்லாததுமாய் இருந்தபோதிலும், மிக முக்கியமானவை. தொழிற்படையைச் சேர்ந்தவர்களுக்கு, மற்ற யுத்த சிப்பாய்களுக்குக் கொடுப்பதுபோல் யுத்த உடுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திடமான சரீரம், கஷ்டங்களைத் தாங்கும் சகிப்புத்தன்மை, உடல் வலிமைகொண்டு கடுமையாக வேலைசெய்யும் திறமை, இவைகளை உடையவர்கள் தான் இந்தப் படைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இந்தியத் தொழிற்படையைச் சேர்ந்தவர்களும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில், மற்ற சிப்பாய்களைப்போல் யுத்தம் செய்யவேண்டும். போர் செய்யும் சிப்பாய்களுக்கும், வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் ஏற்றத்தாழ்வு வித்தியாசங்கள் இல்லை. யுத்த உடுப்பு கௌரவத்தையும், சமத்துவத்தையும் கொடுக்கிறது. தொழிற்படையைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய உடுப்பைப்பற்றிப் பெருமை கொள்ளுகிறார்கள். மற்றப் படைகளை விட, தாங்கள் எந்த விதத்திலும் குறைந்தவர்களல்ல என்ற உணர்ச்சி அவர்களிடம் இருக்கிறது.

மலேயாவில் உள்ள இந்தியத் தொழிற்படையைக் கண்ட ஒரு நிருபர் இந்த விவரங்களைக் கூறியிருக்கிறார். மேலும் அவர் கூறுவதாவது:—

"ராணுவ உத்தியோகஸ்தர்களும், தொழிற்படையைச் சேர்ந்தவர்களும் தோழர்களைப்போல நடந்து கொள்ளுகிறார்கள். படையின் இரண்டாவது தளகர்த்தர் லக்னோவில் (ஐக்கிய மாகாணத்தின் தலை நகரம்) லாமார்டினியேர் என்ற கலாசாலையில் படித்தவர். அவருக்கு ஐக்கிய மாகாணத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். அவருடைய மாகாணத்திலிருந்து வரும் தொழிலாளர்களுடன் அவர் மிகச் சந்தோஷமாகக் காலங்கழிக்கிறார். குமேயன், அல்மோரா முதலிய ஜில்லாக்களிலிருந்து வந்த தொழிலாளிகள் அவருடன் வேலை செய்கிறார்கள்.

தேயிலைப் பானத்தில் பங்கு.

"ராணுவ உத்தியோகஸ்தர்களுடன் நான் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு இளந் தொழிலாள சிப்பாய் வந்து, ராணுவ முறையின்படி 'சலாம்' செய்துவிட்டு, தேயிலைப்பானத்தை ('டீ') கொண்டுவந்தான். தொழிற்படைக் காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்காகத் தேயிலைப் பானம் தயார் செய்தார்கள்; அதில் ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் பங்கு அளித்தார்கள்.

"மலேயாவிலுள்ள இதர துருப்புகளுக்கு உள்ள சௌகரியங்களெல்லாம், இந்திய தொழிற்படைக்கும் கொடுக்கப்படுகின்றன. விளையாடும் இடங்கள், சிற்றுண்டி சாலைகள், வெளிவேடிக்கைகள், ஒரு 'ரேடியோ' இவைகளெல்லாம் இருக்கின்றன. 'ரேடியோ'வின் மூலமாக மேல் நாட்டு சங்கீதத்தைக் கேட்டு அவர்கள் ஆனந்திப்பது வழக்கம் என்று படையின் தளகர்த்தர் எனக்குத் தெரிவித்தார். இந்திய 'ரேடியோ' நிலையங்கள் மூலமாக அவர்கள் செய்திகளையும், இந்துஸ்தானி சங்கீதத்தையும், அவர்கள் கேட்டாலும், ஹாவே என்ற ஆனந்தத் தீவின் அருமையான பாட்டுகளையும், உணர்ச்சி ஊட்டக்கூடிய ஸ்பானிஷ், அமெரிக்க இன்பப் பாடல்களையும், மனத்தை உற்சாகப்படுத்தும் 'பாண்டு' வாத்திய சங்கீதத்தையும் கேட்பதில் அவர்களுக்கு ரொம்பவும் இஷ்டம். அவர்கள் சுங்கான் பிடிக்கிறார்கள். ஆங்கில பாஷை தெரியாவிட்டாலும், ஆங்கில 'சினிமா' படங்களைப் பார்த்து ஆனந்திக்கிறார்கள். அப்படங்களில் மேல்நாட்டுப் பெண்கள் நீளம் மிகக் குறைந்த ஆடை அணிவதையும், தண்ணீரில் நீந்தும் ஆடையோடு வருவதையும், தாராளமான மனப்பான்மையுடம் கண்டுகளிக்கிறார்கள்.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.